# வேதாகம மனப்பாட வசனங்கள்

## பாகம் 2

- 6 - 12 வயது வரையான சிறுவர்களுக்கு
- 365 மிக சிறிய வேத வசனங்கள்
- பல தலைப்புகளுடன்

Available in Tanglish



# வேதாகம மனப்பாட வசனங்கள்

## பாகம் 2

| *6 - 12 வயது வரையான சிறுவர்களுக்கு* |

| *365 அவசியமான வேத வசனங்கள்* |

| *பல தலைப்புகளுடன்* |

*ஏசுதாஸ் சாலொமோன்*

**WOG BOOKS 29**

First Edition 2021

**Author:**
Yesudas Solomon / *ஏசுதாஸ் சாலொமோன்*
Bible Minutes, a unit of Word of God Ministries,
www.WordOfGod.in

**Copyright: Public Domain /*இலவசம் / பொதுதளம்***
This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us.
*இந்த புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்த புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்பு செய்துக்கொள்ளலாம்.*

**Download:**
www.WordOfGod.in and www.Archive.org

**Self-Printing Options:**
A4 Size, Booklet Type, Print on Both sides, after printing fold or cut in the middle.

**Contact Us:**
**Email:** wordofgod@wordofgod.in
**Mobile/WhatsApp:**
+91 90190 49070 or +91 7676 50 5599
**YouTube:** Bible Minutes
**Facebook**: Bible Minutes

# பொருளடக்கம்


*1. என்னுரை* ........................................................ 1

*2. துதி* ........................................................ 3

*3. மலைப் பிரசங்கம்* ........................................................ 3

*4. பரமண்டல ஜெபம் / கர்த்தரின் ஜெபம்* .................... 4

*5. ஆவியின் கனி 9* ........................................................ 5

*6. சிறிய வசனங்கள்* ........................................................ 5

*7. தேவன்* ........................................................ 7

*8. வசனங்கள் தேவனுடைய வார்த்தைகள்* .................... 10

*9. ஜெபம்* ........................................................ 12

*10. பிள்ளைகள்* ........................................................ 13

*11. பெற்றொர்களுக்கு கீழ்ப்படிதல்* ................................ 15

*12. குரங்கிலிருந்து மனிதன் வரவில்லை, தேவனால் சிருஷ்டிக்கப்பட்டான்* ................................................ 16

*13. Big Bang Theory / பெருவெளிப்பாடு நிரூபிக்கப்படாதது - தேவனே அனைத்தையும் சிருஷ்டித்தார்* ................................................ 17

*14. மன்னிப்பு* ........................................................ 19

*15. ஆலோசனைகள்* ........................................................ 20

*16. 10 கட்டளைகள்/கற்பனைகள்* .................................. 22

*17. சர்வாயுத வர்க்கம்* ................................................ 23

*18. 12 அப்போஸ்தலர்கள்* ............................................ 24

*19. ஒன்பது வரங்கள்* ................................................ 25

*20.* அன்பு ........................................................ 26

*21.* சபையின் உபதேசம் ........................................ 27

*22.* ஐந்து வகை ஊழியங்கள் ................................. 28

*23.* நீதிமான் என்பவன் யார்? ................................. 28

*24.* பரலோகம் செல்பவன் யார்? ............................ 29

*25.* புத்தியுள்ள மனுஷன் ........................................ 30

*26.* வாக்குத்தத்தங்கள் ............................................. 31

*27.* சங்கீதம் 1 ...................................................... 37

*28.* சங்கீதம் 23 .................................................... 38

*29.* சங்கீதம் 91 .................................................... 39

*30.* சங்கீதம் 100 .................................................. 41

*31.* சங்கீதம் 117 .................................................. 42

*32.* சங்கீதம் 118 .................................................. 42

*33.* சங்கீதம் 121 .................................................. 46

*34.* சங்கீதம் 128 .................................................. 47

*35.* சங்கீதம் 133 .................................................. 48

*36.* சங்கீதம் 134 .................................................. 48

*37.* சங்கீதம் 136 .................................................. 49

*38.* சங்கீதம் 148 .................................................. 52

*39.* சங்கீதம் 150 .................................................. 54

*40.* முடிவு வசனங்கள் ............................................. 55

# என்னுரை

*தேவனுடைய உன்னத நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த இரண்டாவது புத்தகத்தை உங்களுக்கு கொடுப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். தேவனுடைய வார்த்தைகளாகிய வேத வசனங்களை உங்கள் பிள்ளைகள் மனப்பாடம் செய்ய நீங்கள் எடுத்திருக்கும் முயற்சியும், உங்களின் மேலான எண்ணமும் நிறைவேற தேவன் சகல வகையிலும் உதவி செய்வாராக.*

*இதற்கு முன்பு பாகம் 1 என்ற புத்தகத்தில் 100 மிக சிறிய வசனங்களை, மனப்பாடம் செய்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இல்லை என்றால், அந்த வசனங்களையும் மனப்பாடம் செய்ய வேண்டிக்கொள்கிறேன். தேவனுடைய வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் பதிய வைக்கும் போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் ஏராளம் ஏராளம். தேவனுடைய சித்தத்தை அறிந்துக்கொள்ள மிகவும் சிறந்த வழி இதுவே. இந்த வசனங்கள் இருதயத்தில் இருக்கும் போது ஏற்ற வேலையில் தேவன் அவைகள் நினைவுப்படுத்தி நம்முடைய பிள்ளைகளை தம் சித்தத்தின்படி நடத்துவார்.*

***பயன் படுத்தும் முறை:***

*ஒவ்வொரு வசனத்திற்கான அர்த்தத்தையும் சொல்லிக் கொடுப்பது மிகவும் அவசியம். கீழ்கொடுக்கப்பட்டுள்ள ஏதாவது ஒருவகையில் இந்த புத்தகத்தை பயன்படுத்தலாம்:*

- *ஞாயிறு பள்ளியில் / Sunday Class*

- *விடுமுறை வேதாகம பள்ளியில் / VBS*
- *அனுதினமும் ஒரு வசனம் உங்கள் வீடுகளில்*
- *வாரத்திற்கு ஒரு வசனம் உங்கள் வீடுகளில்*
- *மாதத்திற்கு **1** அல்லது **2** அல்லது **3** வசனங்கள் உங்கள் வீடுகளில்*
- *உங்கள் சபையின் இளம் வாலிபர் கூடுகையில்*
- *வருடத்திற்கு ஒருமுறை வேதாகம பரீட்சைகளில் (Annual Bible Exam)*
- *வேதாகம போட்டிகளில் (Bible Quiz)*
- *மற்றும் பல*

*நான் ஒரு சில உதாரணங்களை மட்டுமே இங்கு கொடுத்துள்ளேன். உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் எது சிறந்ததோ அந்த வகையை பயன்படுத்துங்கள்.*

*"தேதி" என்பது உங்கள் பிள்ளைகள் மனப்பாடம் செய்த நாளை குறிக்கவும், "கையொப்பம்" என்பது சரிபார்த்தவர் / கண்காணி பயன்படுத்தவும் கொடுக்கப்பட்டுள்ளது,*

*வேத வசனங்களை மனப்பாடம் செய்யும் முன்பு "இந்த வசனங்களால் எனக்கு சகல ஆவிக்குரிய, பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும்" என்று ஜெபம் செய்து தொடருங்கள். தேவன் நிச்சயமாக தம்முடைய வார்த்தையினால் கிடைக்கு ஆசீர்வாதங்களை உங்களுக்கு கொடுப்பார். ஆமேன்.*

*ஆசிரியர்*

***19**-டிசம்பர்-**2021***

# துதி

1. *கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:1*
2. *இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம் - சங்கீதம் 118:24*
3. *அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக - சங்கீதம் 149:1*
4. *கர்த்தரைத் துதியுங்கள்; நம்முடைய தேவனைக் கீர்த்தனம்பண்ணுகிறது நல்லது, துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது - சங்கீதம் 147:1*
5. *உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு[என்று சொல்லப்படுகிறவைகள்] முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன் - சங்கீதம் 138:1*

# மலைப் பிரசங்கம்

6. *ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது - மத்தேயு 5:3*
7. *துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள் - மத்தேயு 5:4*
8. *சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் - மத்தேயு 5:5*

9. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள் - மத்தேயு 5:6
10. இரக்கமுடையவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் - மத்தேயு 5:7
11. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் - மத்தேயு 5:8
12. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் - மத்தேயு 5:9
13. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது - மத்தேயு 5:14

# பரமண்டல ஜெபம் / கர்த்தரின் ஜெபம்

14. நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக - மத்தேயு 6:9
15. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக - மத்தேயு 6:10

*16.* *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் - மத்தேயு **6:11***

*17.* *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் - மத்தேயு **6:12***

*18.* *எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே - மத்தேயு **6:13***

# ஆவியின் கனி 9

*19.* *ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் - கலாத்தியர் **5:22***

*20.* *சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை - கலாத்தியர் **5:23***

*21.* *ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் - எபேசியர் **5:9***

# சிறிய வசனங்கள்

*22.* *தேவவசனம் வளர்ந்து பெருகிற்று - அப்போஸ்தலர் **12:24***

23. *காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் - 2 கொரிந்தியர் 4:18*
24. *சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் - 1 தெசலோனிக்கேயர் 5:25*
25. *கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது - எபேசியர் 4:7*
26. *இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக்கொண்டிரு - 1 தீமோத்தேயு 4:11*
27. *நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை - யோவான் 5:41*
28. *தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம் - எபிரெயர் 6:3*
29. *என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன் - ரோமர் 11:14*
30. *சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள் - ரோமர் 3:17*
31. *மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர் - கலாத்தியர் 3:20*
32. *உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை - ரோமர் 3:11*
33. *நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாய் இருக்கிறீர்கள் - லூக்கா 24:48*
34. *கோணலானதை நேராக்கக்கூடாது; குறைவானதை எண்ணிமுடியாது - பிரசங்கி 1:15*

35. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் - 1 கொரிந்தியர் 15:26
36. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி - 2 தீமோத்தேயு 2:3
37. அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று - அப்போஸ்தலர் 8:8
38. உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு - 1 தீமோத்தேயு 5:3

# தேவன்

39. பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் - சங்கீதம் 90:2
40. கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்துமுடியாது - சங்கீதம் 145:3
41. தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர் - சங்கீதம் 46:1
42. கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு - 2 கொரிந்தியர் 3:17

43. கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது - சங்கீதம் 145:9
44. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் - நீதிமொழிகள் 2:6
45. மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் - 2 கொரிந்தியர் 10:17
46. மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது - அப்போஸ்தலர் 5:29
47. கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார் - ஏசாயா 26:4
48. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் - யோவான் 3:16
49. நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் - யோவான் 10:11
50. ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் - 1 கொரிந்தியர் 10:31

51. *அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் - மத்தேயு 28:6*

52. *அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் - யோவான் 14:6*

53. *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் - யோவான் 14:1*

54. *தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் - 2 தீமோத்தேயு 1:7*

55. *சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார் - ஏசாயா 40:29*

56. *கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் - ஏசாயா 40:31*

57. *யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார் - ரோமர் 10:12*

*58.* அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம் - 1 யோவான் 4:19

*59.* திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் - யோவான் 10:10

*60.* கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள் - நீதிமொழிகள் 1:7

# வசனங்கள் தேவனுடைய வார்த்தைகள்

*61.* தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர் - நீதிமொழிகள் 30:5

*62.* கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது - சங்கீதம் 33:4

*63.* உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது - சங்கீதம் 119:105

64. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது - உபாகமம் 6:6

65. நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல - 1 யோவான் 5:3

66. நீங்கள் புத்தியைக் கேட்டு, ஞானமடையுங்கள்; அதை விட்டு விலகாதிருங்கள் - நீதிமொழிகள் 8:33

67. நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் - சங்கீதம் 119:11

68. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் - யோவான் 8:32

69. கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன் - சங்கீதம் 130:5

70. நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் - யாக்கோபு 1:22

# ஜெபம்

71. *உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள் - லூக்கா 6:28*
72. *நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் - மத்தேயு 21:22*
73. *அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் - 1 பேதுரு 5:7*
74. *நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது - மாற்கு 14:38*
75. *நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள் - ரோமர் 12:12*
76. *இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் - கொலோசேயர் 4:2*
77. *உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் - யாக்கோபு 5:13*

*78. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள் - பிலிப்பியர் 4:6*

# பிள்ளைகள்

*79. இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் - சங்கீதம் 127:3*

*80. பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம்; பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே - நீதிமொழிகள் 17:6*

*81. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான் - நீதிமொழிகள் 23:24*

*82. இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல - மத்தேயு 18:14*

*83. பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென் - 1 யோவான் 5:21*

*84. பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும் - நீதிமொழிகள் 20:11*

85. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை - 3 யோவான் 1:4
86. இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் - மத்தேயு 18:10
87. பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் - 1 யோவான் 4:4
88. பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள் - நீதிமொழிகள் 8:32
89. பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன் - சங்கீதம் 34:11
90. சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது - மத்தேயு 19:14
91. அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார் - மாற்கு 10:16

*92. இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் - மத்தேயு 18:5*

# பெற்றொர்களுக்கு கீழ்ப்படிதல்

*93. என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே - நீதிமொழிகள் 1:8*

*94. பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம் - எபேசியர் 6:1*

*95. பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது - கொலோசெயர் 3:20*

*96. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும் - நீதிமொழிகள் 1:9*

*97. உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் - எபேசியர் 6:2*

*98. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது - எபேசியர் 6:3*

## குரங்கிலிருந்து மனிதன் வரவில்லை, தேவனால் சிருஷ்டிக்கப்பட்டான்

*99.* *தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் - ஆதியாகமம் 2:7*

*100.* *தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் - ஆதியாகமம் 1:27*

*101.* *தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது - யோபு 33:4*

*102.* *உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி, என்னை உருவாக்கிற்று; உம்முடைய கற்பனைகளைக் கற்றுக்கொள்ள என்னை உணர்வுள்ளவனாக்கும் - சங்கீதம் 119:73*

*103.* *நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும் - சங்கீதம் 139:14*

*104.* *நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை - சங்கீதம் 139:15*

*105. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது - சங்கீதம் 139:16*

## *Big Bang Theory* / பெருவெளிப்பாடு நிரூபிக்கப்படாதது - தேவனே அனைத்தையும் சிருஷ்டித்தார்

*106. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் - ஆதியாகமம் 1:1*

*107. சகலமும் அவர்[இயேசு] மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை - யோவான் 1:3*

*108. அவருக்குள்[இயேசுவுக்குள்] சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது - கொலோசேயர் 1:16*

*109. கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது - சங்கீதம் 33:6*

*110. அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார் - எரேமியா 10:12*

*111. கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்... - யாத்திராகமம் 20:11*

*112. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம் - எபிரேயர் 11:3*

*113. கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது - எபிரேயர் 1:10*

*114. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது - சங்கீதம் 19:1*

*115.* கர்த்தாவே, தேவரீர், ... நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது - வெளிப்படுத்தல் *4:11*

*116.* பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும் - *2* பேதுரு *3:5*

*117.* அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள் - *2* பேதுரு *3:6*

# மன்னிப்பு

*118.* ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் - எபேசியர் *4:32*

*119.* [இயேசு] அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார் - லூக்கா *7:48*

*120.* நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி

*நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் - 1 யோவான் 1:9*

*121. என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன் - 2 நாளாகமம் 7:14*

## ஆலோசனைகள்

*122. உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே - நீதிமொழிகள் 22:28*

*123. பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன் - 1 பேதுரு 3:11*

*124. நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் - 1 கொரிந்தியர் 11:31*

*125. மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் - 1 கொரிந்தியர் 15:33*

*126. உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து - நீதிமொழிகள் 3:5*

*127. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் - நீதிமொழிகள் 3:6*

*128. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் - லூக்கா 6:36*

*129. உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் - அப்போஸ்தலர் 3:20*

*130. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் - பிலிப்பியர் 4:4*

*131. மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லான்; பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான் - நீதிமொழிகள் 14:5*

*132. மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் - லூக்கா 6:31*

*133. நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் - மத்தேயு 7:1*

*134. ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ நாசமடைவான் - நீதிமொழிகள் 13:20*

*135. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் - 2 கொரிந்தியர் 9:7*

## *10 கட்டளைகள்/கற்பனைகள்*

*136. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் - யாத்திராகமம் 20:3*

*137. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் - யாத்திராகமம் 20:4-5*

*138. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக - யாத்திராகமம் 20:7*

*139. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக - யாத்திராகமம் 20:8*

*140. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக - யாத்திராகமம் 20:12*

*141. கொலை செய்யாதிருப்பாயாக - யாத்திராகமம் 20:13*

*142. விபசாரம் செய்யாதிருப்பாயாக - யாத்திராகமம் 20:14*

*143. களவு செய்யாதிருப்பாயாக - யாத்திராகமம் 20:15*

*144. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக - யாத்திராகமம் 20:16*

*145. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக - யாத்திராகமம் 20:17*

## சர்வாயுத வர்க்கம்

*146. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும் - எபேசியர் 6:14*

*147.* *சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் - எபேசியர் 6:15*

*148.* *பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள் - எபேசியர் 6:16*

*149.* *இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் - எபேசியர் 6:17*

## *12 அப்போஸ்தலர்கள்*

*150.* *அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான் - மத்தேயு 10:2*

*151.* *பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு - மத்தேயு 10:3*

*152.* *கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே - மத்தேயு 10:4*

# ஒன்பது வரங்கள்

*153.* *வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே - 1 கொரிந்தியர் 12:4*

*154.* *ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே - 1 கொரிந்தியர் 12:5*

*155.* *கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே - 1 கொரிந்தியர் 12:6*

*156.* *ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது - 1 கொரிந்தியர் 12:7*

*157.* *எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும் - 1 கொரிந்தியர் 12:8*

*158.* *வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும் - 1 கொரிந்தியர் 12:9*

*159.* *வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம்*

*உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது - 1 கொரிந்தியர் 12:10*

*160. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார் - 1 கொரிந்தியர் 12:11*

# அன்பு

*161. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது - 1 கொரிந்தியர் 13:4*

*162. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது - 1 கொரிந்தியர் 13:5*

*163. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும் - 1 கொரிந்தியர் 13:6*

*164. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் - 1 கொரிந்தியர் 13:7*

*165. அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய*

*பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம் - 1 கொரிந்தியர் 13:8*

*166. நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது - 1 கொரிந்தியர் 13:9*

*167. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் - 1 கொரிந்தியர் 13:10*

*168. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது - 1 கொரிந்தியர் 13:13*

*169. நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல - 1 யோவான் 5:3*

## சபையின் உபதேசம்

*170. உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு - எபேசியர் 4:4*

*171. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் - எபேசியர் 4:5*

*172. எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும்,*

*உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் - எபேசியர் 4:6*

## ஐந்து வகை ஊழியங்கள்

*173. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் - எபேசியர் 4:12*

*174. அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் - எபேசியர் 4:13*

## நீதிமான் என்பவன் யார்?

*175. ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்து - எசேக்கியேல் 18:5*

*176. மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் தூரஸ்திரீயோடே சேராமலும் - எசேக்கியேல் 18:6*

*177. ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலுமிருந்து, கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக்கொடுத்து, தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து - எசேக்கியேல் 18:7*

*178. வட்டிக்குக் கொடாமலும், பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து - எசேக்கியேல் 18:8*

*179. என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் - எசேக்கியேல் 18:9*

## பரலோகம் செல்பவன் யார்?

*180. கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? - சங்கீதம் 15:1*

*181. உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே - சங்கீதம் 15:2*

*182.* *அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான் - சங்கீதம் 15:3*

*183.* *ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான் - சங்கீதம் 15:4*

*184.* *தன் பணத்தை வட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை - சங்கீதம் 15:5*

## புத்தியுள்ள மனுஷன்

*185.* *நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் - மத்தேயு 7:24*

*186.* *பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது*

*கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது - மத்தேயு 7:25*

*187. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான் - மத்தேயு 7:26*

*188. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார் - மத்தேயு 7:27*

## வாக்குத்தத்தங்கள்

*189. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் - நீதிமொழிகள் 21:31*

*190. நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் - சங்கீதம் 32:8*

*191. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் - உபாகமம் 28:3*

*192. திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் - யோவான் 16:33*

*193.* நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் - உபாகமம் *28:6*

*194.* நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் - ஆதியாகமம் *12:2*

*195.* உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன் - ஆதியாகமம் *12:3*

*196.* சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள் - சங்கீதம் *37:11*

*197.* அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும் - சங்கீதம் *37:26*

*198.* தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய் - சங்கீதம் *37:27*

*199.* நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள் - சங்கீதம் *37:29*

*200.* அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை - சங்கீதம் *37:31*

*201.* *நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம் - சங்கீதம் 37:39*

*202.* *உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள்; அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும் - சங்கீதம் 102:28*

*203.* *அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் - சங்கீதம் 112:1*

*204.* *அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும் - சங்கீதம் 112:2*

*205.* *தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன் - ஏசாயா 44:3a*

*206.* *உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் - ஏசாயா 44:3b*

*207.* *நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள் - நீதிமொழிகள் 20:7*

*208.* *அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன் - எரேமியா 32:38*

*209.* *நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன்*

*தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் - யோசுவா **1:9***

***210.*** *நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் - ஏசாயா **41:10***

***211.*** *உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன் - ஏசாயா **41:13***

***212.*** *கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார் - ஏசாயா **26:4***

***213.*** *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் - மத்தேயு **11:28***

***214.*** *என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் - **2** கொரிந்தியர் **12:9***

***215.*** *கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் - ஏசாயா **40:31***

*216. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் - எரேமியா 29:11*

*217. எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் - பிலிப்பியர் 4:7*

*218. நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார் - பிலிப்பியர் 4:9*

*219. கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் - ரோமர் 10:13*

*220. கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான் - யாத்திராகமம் 14:14*

*221. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் - யாக்கோபு 4:10*

*222. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு - பிலிப்பியர் 4:13*

*223. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில்*

*அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் - ரோமர் 8:28*

*224. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் - யாக்கோபு 1:5*

*225. தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் - யாக்கோபு 4:7*

*226. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான் - யோவான் 3:36*

*227. குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் - யோவான் 8:36*

*228. ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் - யோவான் 8:51*

*229. நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்,*

அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் - மாற்கு 11:24

230. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் - பிலிப்பியர் 4:19

231. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார் - சங்கீதம் 34:17

232. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் - சங்கீதம் 34:18

## சங்கீதம் 1

233. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் - சங்கீதம் 1:1

234. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் - சங்கீதம் 1:2

235. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து,

*இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் - சங்கீதம் 1:3*

*236. துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள் - சங்கீதம் 1:4*

*237. ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை - சங்கீதம் 1:5*

*238. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும் - சங்கீதம் 1:6*

## *சங்கீதம் 23*

*239. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் - சங்கீதம் 23:1*

*240. அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார் - சங்கீதம் 23:2*

*241. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் - சங்கீதம் 23:3*

*242. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது*

*கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் - சங்கீதம் 23:4*

*243. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது - சங்கீதம் 23:5*

*244. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் - சங்கீதம் 23:6*

## சங்கீதம் 91

*245. உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான் - சங்கீதம் 91:1*

*246. நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன் - சங்கீதம் 91:2*

*247. அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார் - சங்கீதம் 91:3*

*248. அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம்*

*உனக்குப் பரிசையும் கேடகமுமாகும் - சங்கீதம் 91:4*

*249. இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும் - சங்கீதம் 91:5*

*250. இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய் - சங்கீதம் 91:6*

*251. உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது - சங்கீதம் 91:7*

*252. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய் - சங்கீதம் 91:8*

*253. எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய் - சங்கீதம் 91:9*

*254. ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது - சங்கீதம் 91:10*

*255. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார் - சங்கீதம் 91:11*

*256. உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் - சங்கீதம் 91:12*

*257. சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய் - சங்கீதம் **91:13***

*258. அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன் - சங்கீதம் **91:14***

*259. அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன் - சங்கீதம் **91:15***

*260. நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன் - சங்கீதம் **91:16***

## *சங்கீதம் 100*

*261. பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள் - சங்கீதம் **100:1***

*262. மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள் - சங்கீதம் **100:2***

*263. கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம்*

*அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம் - சங்கீதம் 100:3*

*264. அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள் - சங்கீதம் 100:4*

*265. கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது - சங்கீதம் 100:5*

## சங்கீதம் 117

*266. ஜாதிகளே, எல்லோரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள் - சங்கீதம் 117:1*

*267. அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா - சங்கீதம் 117:2*

## சங்கீதம் 118

*268. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 118:1*

*269. அவர் கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொல்வதாக - சங்கீதம் 118:2*

*270.* *அவர் கிருபை என்றுமுள்ளதென்று, ஆரோனின் குடும்பத்தார் சொல்வார்களாக - சங்கீதம் 118:3*

*271.* *அவர் கிருபை என்றுமுள்ளதென்று, கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக - சங்கீதம் 118:4*

*272.* *நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார் - சங்கீதம் 118:5*

*273.* *கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்? - சங்கீதம் 118:6*

*274.* *எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன் - சங்கீதம் 118:7*

*275.* *மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் - சங்கீதம் 118:8*

*276.* *பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் - சங்கீதம் 118:9*

*277.* *எல்லா ஜாதியாரும் என்னை வளைந்துகொள்ளுகிறார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன் - சங்கீதம் 118:10*

*278.* *என்னைச் சுற்றிலும் வளைந்துகொள்ளுகிறார்கள்; கர்த்தருடைய*

*நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன் - சங்கீதம் 118:11*

*279. தேனீக்களைப்போல என்னை வளைந்துகொள்ளுகிறார்கள்; முள்ளில் பற்றின நெருப்பைப்போல அணைந்து போவார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன் - சங்கீதம் 118:12*

*280. நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; கர்த்தரோ எனக்கு உதவிசெய்தார் - சங்கீதம் 118:13*

*281. கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானார் - சங்கீதம் 118:14*

*282. நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும் - சங்கீதம் 118:15*

*283. கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும் - சங்கீதம் 118:16*

*284. நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் - சங்கீதம் 118:17*

*285. கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை - சங்கீதம் 118:18*

*286. நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன் - சங்கீதம் 118:19*

*287. கர்த்தரின் வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள் - சங்கீதம் 118:20*

*288. நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால், நான் உம்மைத் துதிப்பேன் - சங்கீதம் 118:21*

*289. வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று - சங்கீதம் 118:22*

*290. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது - சங்கீதம் 118:23*

*291. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம் - சங்கீதம் 118:24*

*292. கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும் - சங்கீதம் 118:25*

*293. கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம் - சங்கீதம் 118:26*

*294. கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்; பண்டிகைப்பலியைக் கொண்டுபோய்ப் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள் - சங்கீதம் 118:27*

*295.* *நீர் என் தேவன், நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என் தேவன், நான் உம்மை உயர்த்துவேன் - சங்கீதம் 118:28*

*296.* *கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 118:29*

## ***சங்கீதம் 121***

*297.* *எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் - சங்கீதம் 121:1*

*298.* *வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் - சங்கீதம் 121:2*

*299.* *உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார் - சங்கீதம் 121:3*

*300.* *இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை - சங்கீதம் 121:4*

*301.* *கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார் - சங்கீதம் 121:5*

*302.* *பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை - சங்கீதம் 121:6*

*303. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார் - சங்கீதம் 121:7*

*304. கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார் - சங்கீதம் 121:8*

## *சங்கீதம் 128*

*305. கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான் - சங்கீதம் 128:1*

*306. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் - சங்கீதம் 128:2*

*307. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள் - சங்கீதம் 128:3*

*308. இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான் - சங்கீதம் 128:4*

*309. கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய் - சங்கீதம் 128:5*

*310. நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய் - சங்கீதம் 128:6*

## *சங்கீதம் 133*

*311. இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? - சங்கீதம் 133:1*

*312. அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் - சங்கீதம் 133:2*

*313. எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் - சங்கீதம் 133:3*

## *சங்கீதம் 134*

*314. இதோ, இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் - சங்கீதம் 134:1*

*315.* *உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் - சங்கீதம் 134:2*

*316.* *வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக - சங்கீதம் 134:3*

## *சங்கீதம் 136*

*317.* *கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:1*

*318.* *தேவாதி தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:2*

*319.* *கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:3*

*320.* *ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:4*

*321.* *வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:5*

*322.* *தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:6*

*323.* *பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:7*

*324. பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:8***

*325. இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:9***

*326. எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:10***

*327. அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப்பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:11***

*328. பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் அதைச் செய்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:12***

*329. சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:13***

*330. அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:14***

*331. பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப்போட்டவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:15***

*332. தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் **136:16***

*333. பெரிய ராஜாக்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:17*

*334. பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:18*

*335. எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:19*

*336. பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:20*

*337. அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:21*

*338. அதைத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகவே தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:22*

*339. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:23*

*340. நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலைபண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:24*

*341. மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:25*

*342.* பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது - சங்கீதம் 136:26

## சங்கீதம் 148

*343.* அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; உன்னதங்களில் அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 148:1

*344.* அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 148:2

*345.* சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்; பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 148:3

*346.* வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள்; ஆகாயமண்டலத்தின்மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 148:4

*347.* அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது - சங்கீதம் 148:5

*348.* அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்; மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார் - சங்கீதம் 148:6

*349. பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; மகாமச்சங்களே, சகல ஆழங்களே - சங்கீதம் 148:7*

*350. அக்கினியே, கல்மழையே, உறைந்தமழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே - சங்கீதம் 148:8*

*351. மலைகளே, சகல மேடுகளே, கனிமரங்களே, சகல கேதுருக்களே - சங்கீதம் 148:9*

*352. காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே - சங்கீதம் 148:10*

*353. பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே - சங்கீதம் 148:11*

*354. வாலிபரே, கன்னிகைகளே, முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள் - சங்கீதம் 148:12*

*355. அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது - சங்கீதம் 148:13*

*356. அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா - சங்கீதம் 148:14*

# சங்கீதம் 150

357. அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 150:1

358. அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 150:2

359. எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 150:3

360. தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்; யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 150:4

361. ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்; பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள் - சங்கீதம் 150:5

362. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா - சங்கீதம் 150:6

# முடிவு வசனங்கள்

*363. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் - 1 பேதுரு 4:7*

*364. விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் - வெளிப்படுத்தல் 2:28*

*365. காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே - பிரசங்கி 12:13*

<u>எங்களின் இதர நூல்கள்</u>

1. ஒரு வருட வேத வாசிப்பு திட்டம்
2. *One Year Bible Reading Plan*
3. சங்கீதமும் நீதிமொழிகளும்
4. தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் 1
5. தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் 2
6. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 1*
7. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 2*
8. *Bible Memory Verses Volume 1*
9. *Bible Memory Verses Volume 2*
10. *Bible Coloring Books 01 Creation [Tamil, English]*
11. *Bible Coloring Books 02 Adam and Eve [Tamil, English]*
12. *Bible Coloring Books 03 Cain and Abel [Tamil, English]*
13. *Bible Coloring Books 04 Noah [Tamil, English]*
14. ஞாயிறு பள்ளி பாடங்கள்-தொடக்கநிலை - பாகம் 1
15. *Tanglish - Gnayiru Palli Paadangal - Thodakkanilai - Baagam 1*
16. *Bible Coloring Book for Sunday School Syllabus Beginners - Volume 1*
17. வேதாகம தியானங்கள் பாகம் 1 40 லெந்து நாட்கள்
18. வேதாகம தியானங்கள் பாகம் 2 40 லெந்து நாட்கள்
19. வேதாகம தியானங்கள் பாகம் 3 - [25 கிறிஸ்மஸ் தியானங்கள்]



சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை; அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான் - மல் 2:6

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் - சங் 119:11

BIBLE MINUTES

